3. அறிவிப்பு

சட்டப்படியான அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு 3 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு இரண்டு உறுப்பினர்களையும், பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு ஓர் உறுப்பினரையும், தமிழ்நாடு நில மேம்பாட்டு நிர்வாகக் குழுமத்திற்கு ஓர் உறுப்பினரையும், மாநில நூலகக் குழுமத்திற்கு ஓர் உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வேண்டுமெனக் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினுடைய உறுப்பினர்களுடைய பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகள் ஆகும். சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினரின் பதவிக் காலம் 22-11-2002 வரையாகும். பாரதியார் பல்கலைக் கழகத்தின் உறுப்பினருடைய பதவிக் காலம் 13-9-2004 வரையாகும். தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்தின் நிர்வாகக் குழு மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 13-9-2004 வரையாகும். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். நியமனத்தாள் வேண்டுவோர் சட்டமன்றப் பேரவைச் செயலக முதன்மைச் செயலாளர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புமனு தாக்கல் செய்யக் கடைசி நாள் 18-04-2002 பிற்பகல் 3 மணி. வேட்பு மனுக்கள் பரிசீலனை 19-04-2002 பிற்பகல் 3 மணி. வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுதல் 22-04-2002 பிற்பகல் 3 மணி. தேர்தல் நாள், தேவையிருப்பின் 24-04-2002 முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை.